# கொன்றை வேந்தன்

ஔவையார்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# கொன்றை வேந்தன்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

ஔவையார் அருளிய

# கொன்றை வேந்தன்

## விளக்கவுரை

**கொன்றை வேந்தன் செல்வ னடியிணை**

**என்று மேத்தித் தொழுவோ மியாமே.**

நாம் என்றும் விநாயகருடைய பாதங்களைத் துதித்து வணங்குவோம்.

**1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**

தாயும் தந்தையும் நம் கண்முன்னே காணும் தெய்வங்கள் ஆவர்.

2. **ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**

கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குதல் மிகவும் நன்று.

**3. இல்லற மல்லது நல்லற மன்று.**

இல்லற வாழ்வே நன்மை தரக்கூடியது ஆகும்.

**4. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.**

வறியவர்களுக்கு உதவி செய்யாமல் பொருள் சேர்த்து வைப்பவர்களின் பொருளைத் தீயவர்கள் (திருடர்கள்) அபகரித்துக் கொள்வர்.

**5. உண்டி சுருங்குதல் பண்டிர்க் கழகு.**

அளவாக உண்பது வயிற்றுக்கு நல்லது.

**6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.**

ஒருவன் தன் ஊர் மக்களைப் பகைத்துக் கொண்டால், தன் சுற்றத்தாரோடு அழிந்துவிடுவான்.

**7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.**

கணிதமும், இலக்கணமும் மனிதர்களுக்கு இரு கண்கள் போன்றவை ஆகும்.

**8. ஏவா மக்கள் மூவா மருந்து.**

பெற்றோர் கட்டளையிடுவதற்கு முன் குறிப்பறிந்து செய்கிற குழந்தைகள் பெற்றோருக்கு அமிழ்தத்தைப் போன்ற சிறப்பானவர்கள்.

**9. ஐயம் புகினும் செய்வன செய்.**

பிறரிடம் யாசகம் பெற்று வாழ்ந்தாலும் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்.

**10. ஒருவனைப் பற்றி யோரகத்திரு.**

நற்குணமுடைய ஒருவனைத் துணையாகக் கொண்டு ஓரிடத்தில் வசிக்க வேண்டும்.

**11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்.**

வேத மந்திரங்கள் ஓதும் வேதியருக்கு, வேதம் ஓதுதலை விடச் சிறந்தது நல்லொழுக்கம் ஆகும்.

**12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.**

பொறாமையுடன் பேசுவது ஒருவனுக்கு அழிவைத் தரும்.

**13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.**

தானியத்தையும், திரவியத்தையும் உறுதியாகத் தேட வேண்டும்.

**14. கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை.**

வாக்குமாறாமலும், முன் பின் முரண்படாமலும் நடந்து கொள்வதே கற்பு ஆகும்.

**15. காவல் தானே பாவையர்க் கழகு.**

கற்பிற்கு அழிவு வராமல் தம்மைக் காத்துக் கொள்வதே மாதர்களுக்கு அழகு.

**16. கிட்டா தாயின் வெட்டென மற.**

நமக்குக் கிடைக்காது என்று தெரிந்த ஒன்றை மறந்து விட வேண்டும்.

**17. கீழோ ராயினும் தாழ வுரை.**

நம்மைவிடத் தாழ்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களிடமும் தாழ்மையாகப் பேசவேண்டும்.

**18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.**

பிறரது குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், உறவினர் என்று எவருமே இருக்க மாட்டார்கள்.

**19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்.**

கூர்மையான அம்பை உடைய பலவானாக இருந்தாலும் கர்வத்துடன் பேசக்கூடாது.

**20. கெடுவது செய்யின் விடுவது கருமம்.**

ஒருவர் நமக்குக் கேடு செய்தாலும், அதை பொருட்படுத்தாமல் அப்படியே விட்டுவிடுதல் உயர்ந்த செயலாகும்.

**21. கேட்டி லுறுதி கூட்டு முடைமை.**

தன்னிடமுள்ள பொருளை இழந்த காலத்திலும், மனம் தளராமல் உறுதியோடு இருப்பது செல்வத்தை மீண்டும் உண்டாக்கும்.

**22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.**

கையில் இருக்கும் பொருளை விட உண்மையான செல்வம் கல்வியே ஆகும்.

**23. கொற்றவ னறித லுற்றிடத் துதவி.**

குடிமக்களின் தேவை அறிந்து, அவர்களைத் தேடிச்சென்று உதவி செய்தல் தன் கடமை என்பதை அரசன் அறிய வேண்டும்.

**24. கேட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.**

கோள் மூட்டிக் கலகம் செய்வோர் காதில் கோள் சொல்வது, காற்றில் நெருப்பு வேகமாகப் பரவுவதைப் போன்றது.

**25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.**

ஒருவன் பிறர்மேல் பழிகளைச் சொல்லிக்கொண்டே இருந்தால், அவன் எல்லாருக்கும் பகையாவான்.

**26. சந்ததிக் கழகு வந்திசெய் யாமை.**

குழந்தைகளோடு வாழ்தலே குடும்பத்திற்கு அழகாகும்.

**27. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.**

தன் பிள்ளையை அறிவுடையவர் என்று பிறர் சொல்லக் கேட்பதே பெற்றோருக்கு அழகாகும்.

**28. சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு.**

எந்த நேரத்திலும் இறை நினைவோடு இருத்தலே தவத்திற்கு அழகாகும்.

**29. சீரைத் தேடின் ஏரைத் தேடு.**

புகழோடு சுகமாக வாழ விரும்பினால், பயிரிடும் உழவுத் தொழிலைச் செய்ய வேண்டும்.

**30. சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.**

இன்ப துன்ப காலங்களிலும் சேர்ந்து இருப்பதே சுற்றத்திற்கு அழகாகும்.

**31. சூதும் வாதும் வேதனை செய்யும்.**

சூதாடுதலும், தேவையில்லாத விவாதமும் துன்பத்தை மட்டுமே தரும்.

**32. செய்தவ மறந்தால் கைதவ மாளும்.**

தவம் செய்வதை விட்டுவிட்டால் அவனை அறியாமை ஆட்கொண்டு விடும்.

**33. சேமம் புகினும் சாமத் துறங்கு.**

காவல் வேலை செய்தாலும் நள்ளிரவில் உறங்க வேண்டும்.

**34. சையொத் திருந்தால் ஐய மிட்டுண்.**

பிறருக்குக் கொடுக்குமளவு பொருள் இருந்தால், பிறருக்கு உணவிட்டு உண்ண வேண்டும்.

**35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்.**

பொருளுள்ளவர் என்று கூறப்படுபவர் அதனால் வரும் அறம், இன்பம், வீடு பேறு ஆகியவற்றையும் அடைவர்.

**36. சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்.**

சோம்பேறிகள் வறுமையில் வாடுவர்.

**37. தந்தைசொல் மிக்க மந்திர மில்லை.**

தந்தையின் சொல்லைவிட சிறந்ததொரு மந்திரம் இல்லை.

**38. தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை.**

தாயைவிட சிறந்த தெய்வம் இல்லை.

**39. திரை கடலோடியும் திரவியம் தேடு.**

கடல் கடந்து அந்நிய நாட்டிற்குச் சென்று பொருள் தேட வேண்டும்.

**40. தீராக் கோபம் போரா முடியும்.**

தணியாத கோபமும் பகையும் பெரும் சண்டையில் முடியும்.

**41. துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு.**

கணவனுக்குத் துன்பம் வந்தபோது பதைக்காமல் பார்த்துக்கொண்டு இருக்கும் மனைவி மடியில் நெருப்பை வைத்துக்கொண்டு வாழ்தலுக்கு ஒப்பாவாள்.

**42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.**

எப்போதும் அவதூறு பேசிக்கொண்டு இருக்கும் பெண்கள் குடும்பத்திற்கு எமன் போன்றவர் ஆவர்.

**43. தெய்வம் சீறில் கைதவ மாளும்.**

ஒருவன் கடவுளின் கோபத்திற்கு ஆளானால் அவனுக்குக் கைகூடிய தவமும் அழிந்துவிடும்.

**44. தேடா தழிக்கின் பாடா முடியும்.**

பொருளைத் தேடாது சேர்த்து வைத்திருந்த பொருளைச் செலவிட்டுக் கொண்டே இருந்தால் இறுதியில் துன்பத்தைத் தரும்.

**45. தையும் மாசியும் வையகத் துறங்கு.**

தை மாதமும், மாசி மாதமும் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்க வேண்டும்.

**46. தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது.**

பிறரிடம் வணங்கிப் பெறும் பொருளில் வாழ்வதைவிட பயிர் செய்து உண்பதே இனிது.

**47. தோழ னோடு மேழைமை பேசேல்.**

வறுமையைப் பற்றி நெருங்கிய நண்பனிடத்தில் கூட பேசக்கூடாது.

**48. நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும்.**

தீயவரோடு கொள்ளும் நட்பு துன்பத்தைத் தரும்.

**49. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.**

நாடு செழித்திருந்தால் மக்களுக்கு ஒரு குறையுமில்லை.

**50. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.**

நிலையான கல்வி கற்றதற்கு அழகு சொன்ன சொல் தவறாது இருத்தலே ஆகும்.

**51. நீரகம் பொருந்திய ஊரகத் திரு.**

நீர்வளம் நிறைந்த ஊரில் வாழ வேண்டும்.

**52. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி.**

சிறிய செயலாக இருந்தாலும் நன்கு ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

**53. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.**

நல்ல நீதி நூல்களை அறிந்து ஒழுக்கத்துடன் வாழ வேண்டும்.

**54. நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை.**

நம் மனத்திற்குத் தெரியாமல் ஒருவருக்கு வஞ்சனை செய்ய இயலாது.

**55. நேரா நோன்பு சீரா காது.**

மனம் பொருந்திச் செய்யாத தவமானது நன்மை தர முடியாது.

**56. நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்.**

கேட்பவர் எளியார் ஆயினும் அவர் மனம் வருந்தும்படி பேசக்கூடாது.

**57. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவார்.**

சிறியவர்களும் செய்யும் காரியத்தால் சிறந்தவராக விளங்குவர்.

**58. நோன்பென் பதுவே கொன்று தின்னாமை.**

பிற உயிர்களைக் கொன்று உண்ணாமல் இருப்பதே விரதமாகும்.

**59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.**

ஒருவர் செய்த பாவ புண்ணியமானது அவர் பயிரிட்டு அறுவடை செய்யும் விளைச்சலில் தெரியும்.

**60. பாலோ டாயினும் காலமறிந் துண்.**

பாலுடன் கூடிய உணவாயினும் உண்ணத்தகும் காலமறிந்து உண்ண வேண்டும்.

**61. பிறன்மனை புகாமை அறமெனத் தகும்.**

அடுத்தவன் மனைவியை விரும்பாதிருத்தலே சிறந்த அறமாகும்.

**62. பீரம் பேணி பாரந் தாங்கும்.**

தாய்ப்பாலை உண்டு வளர்ந்த குழந்தை பலசாலியாகத் திகழும்.

**63. புலையும்  கொலையும்  களவும் தவிர்.**

புலால் உண்ணுதலும், பிற உயிரைக் கொல்லுதலும், பிறர் பொருளைத் திருடுதலும் செய்யக்கூடாது.

**64. பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம்.**

கொடியவர்களிடம் நல்லொழுக்கங்களைக் காண முடியாது.

**65. பெற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்.**

ஞானம் பெற்றோருக்கு உறவினர் என்ற பந்தமும், கோபம் என்ற தீய குணமும் இல்லை.

**66. பேதமை யென்பது மாதர்க் கணிகலம்.**

அறிந்தும் அறியாதவர்போல அமைதிகாக்கும் குணம் பெண்களுக்கு ஆபரணம் போன்றதாகும்.

**67. பையச் சென்றால் வையத் தாங்கும்.**

தகுதியான நேரத்தில், நிதானமாக செய்யும் காரியங்களில் வெற்றி நிச்சயம் உண்டு.

**68. பொல்லாங் கென்பவை யெல்லாம் தவிர்.**

தீமை என்று சொல்லப்படும் அனைத்துச் செயல்களையும் விட்டுவிட வேண்டும்.

**69. போனகம் என்பது தானுழந் துண்டல்.**

ஒருவன் தானாக முயன்று உழைத்து சம்பாதித்ததே உணவு ஆகும்.

**70. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.**

அமிர்தமே ஆயினும் விருந்தினருக்குக் கொடுத்து உண்ண வேண்டும்.

**71. மாரி யல்லது காரிய மில்லை.**

மழை இல்லாவிட்டால் உலகில் எந்தவொரு நல்ல செயலும் நடக்காது.

**72. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.**

மின்னல் மின்னுவதைப் பார்த்தே மழை வருமென்பதை அறிந்துகொள்ளலாம்.

**73. மீகாம னில்லாத மரக்கல மோடாது.**

மாலுமி இல்லாத கப்பல் ஓடாததைப் போல, தலைவனில்லா குடும்பமும், அரசனில்லா நாடும் சிறப்பாகச் செயல்படாது.

**74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.**

பிறருக்குச் செய்யும் நன்மை, தீமைகள் பின்பு நமக்கே வந்து சேரும்.

**75. மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்.**

மூத்தோர்கள் கூறும் அறிவுரையானது அமிர்தம் போன்றது.

**76. மெத்தையில் படுத்தல் நித்திரைக் கழகு.**

மெத்தையில் படுத்து உறங்குதல் தூக்கத்திற்குச் சுகம் தரும்.

**77. மேழிச் செல்வம் கோழை படாது.**

உழுது பயிர் செய்து சேர்த்த செல்வம் ஒருபோதும் வீணாகாது.

**78. மைவிழி யார்தம் மனையகன் றொழுகு.**

விலை மாதர் இல்லங்களில் இருந்து ஒதுங்கி வாழ்தல் நன்று.

**79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.**

ஒருவன் பெரியோர் சொல்லை மீறி நடந்தால், அவன் செய்யும் தொழில் அழிந்துவிடும்.

**80. மோன மென்பது ஞான வரம்பு.**

மௌனமே ஞானத்தின் எல்லையாகும்.

**81. வளவ னாயினு மளவறிந் தழித்துண்.**

சோழ வளவனைப் போன்ற செல்வம் படைத்தவனாக இருந்தாலும், வரவுக்கேற்ப செலவு செய்து உண்ண வேண்டும்.

**82. வானம் சுருங்கில் தானம் சுருங்கும்.**

பூமியில் மழை வருவது குறைந்துவிட்டால், உலகில் நடைபெறக்கூடிய தான தர்மங்கள் அனைத்தும் குறைந்துவிடும்.

**83. விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம்.**

விருந்தினரை உபசரிக்காத இல்லத்தில் நல்லொழுக்கம் என்பது இருக்காது.

**84. வீரன் கேண்மை கூரம் பாகும்.**

வீரனோடு கொண்டுள்ள நட்பு, கையில் கூர்மையான அம்பை வைத்திருப்பதற்கு ஒப்பாகும்.

**85. உரவோ ரென்கை இரவா திருத்தல்.**

வலிமையுடையோர் என்று சொல்லப்படுவது, வறுமை வந்த காலத்திலும் பிறரிடம் யாசிக்காமல் இருப்பதாகும்.

**86. ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு.**

உற்சாகமாக ஊக்கத்துடன் செயல்படுவதே முன்னேற்றத்திற்கு அழகாகும்.

**87. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.**

கலங்கமில்லா மனமுடையவர்களிடம் வஞ்சகமான எண்ணம் இருக்காது.

**88. வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை.**

அரசனானவன் ஒருவனைக் கோபித்தால், அவனுக்கு வேறு துணை இல்லை.

**89. வையந் தோறும் தெய்வந் தொழு.**

பூமியிலுள்ள தலந்தோறும் சென்று கடவுளை வணங்க வேண்டும்.

**90. ஒத்த விடத்து நித்திரை கொள்.**

மனம் விரும்பிய இடத்தில் நித்திரை செய்.

**91. ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்.**

நல்ல நூல்களைக் கல்லாதவர்களிடம் ஒழுக்கமும், அறிவும் இருக்காது.

# கொன்றை வேந்தன்

ஔவையார்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com